# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1960/7 - 2016 මාර්තු මස 28 වැනි සඳුදා - 2016.03.28

*1960/7 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல. : மொற/காணி/01/எப்1/202.
காணி அமைச்சின் இல. : 4-3/06/2014/எச்டபிள்யூ/310.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், மொறட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில், (மொறட்டுவ மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட) மொறட்டுவெல்ல வடக்கு கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபதி சார்பாக, கொழும்பு மாவட்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2016.01.25 ஆம் திகதிய கடஸ்ரல் வரைபட இல. 520214, துண்டு இல.03, தாள் இல.06 இல் துண்டு இல.209 - 210 வரை விபரிக்கப்பட்டுள்ள சுமார் 0.0243 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய இரண்டு (02) காணித் துண்டுகளின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு :-

1. **துண்டு இல. 209**

காணியின் பெயர் : வரி மதிப்பீட்டு இல.2 (பகுதி), பழைய காலி வீதி; விபரம் : தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : - குறிப்பிடப்படவில்லை ; விஸ்தீரணம்: 0.0107 ஹெக்டயார்.

2. **துண்டு இல. 210**

காணியின் பெயர் : வரி மதிப்பீட்டு இல.2 (பகுதி), பழைய காலி வீதி ; விபரம் : தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : ஹேவா தேவகே சைமன் பெர்னாண்டோ ; விஸ்தீரணம்: 0.0136 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு மொறட்டுவ பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கே.சி.நிரோஷன்,
பிரதேச செயலாளர்,
மொறட்டுவ.

பிரதேச செயலகம்,
மொறட்டுவை,
2016 மாச்சு 21

4-546


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.